<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>

<u>**O.S.No.93/2025**</u>

| | | |
|---|---|---|
| வாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | லட்சுமிபதி |
| தகப்பனார் / கணவர் | .. | லேட் முனுசாமி |
| வயது | .. | 53 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | செம்பூர் |
| தாலுக்கா | .. | வந்தவாசி |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

<u>முதல் விசாரணை:</u>

வழக்கில் வாதி தரப்பு சாட்சி 1 ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். பிரதிவாதி வாதி பெயருக்கு 26.03.2022 ம் தேதியில் எழுதி கொடுத்த ஈடுகாட்டிய அடமான கடன் பத்திரம் வா.த.சா.ஆ.1, வாதி பிரதிவாதிக்கு 01.04.2025 தேதியில் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு நகல் வா.த.சா.ஆ.2, வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்று கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.த.சா.ஆ.3 ஆகும்.

**குறுக்கு விசாரணை:**

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**